உ

சிவமயம்.

வேலுமயிலுந்துணை.

OFFICE OF T... REGISTRA... MAD.
6 NOV 1930



# குழந்தைகள் தாலாட்டு.

இஃது

ஆத்தங்குடி

மகா-ள-ள-ஸ்ரீ

கரு. சுப்பையா சேர்வை

அவர்களியற்றியது.

மதுரை

கீழவெளி வீதி நாடார் பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றது.

1930.

உ

சிவமயம்.

வேலும் மயிலுந் துணை

6 NOV 1930
MADRAS

# குழந்தைகள் தாலாட்டு.

## விநாயகர் துதி.

குழந்தைகளைத் தாலாட்டும் குவலயத்துப் பெண்மணிகள்
அழுகுழந்தை தூங்கயிந்த அன்பான தாலாட்டைப்
பிரியமுடன் பாடிநல்ல பேரெடுக்கச் சீருடனே
ஹரிமுகத்தோன் கணபதி தாள் காப்பு.

ஆராரோ ஆராரோ என் கண்ணே
ஆராரோ ஆராரோ.

2603
894.814

## கடவுள் வணக்கம்.

மூலப்பொருளே கண்ணே முதற்பொருளே மூஷிகமே
பாலருறங்க என்கண்ணே பகருமையா தாலாட்டை (1)

ஆதிசிவமே கண்ணே அழுங்குழந்தை தூங்குதற்குச்
சோதிவடிவாக என்கண்ணே தோன்றும் பராபரமே (2)

நாராயணனே கண்ணே நாங்கள்பெற்ற தைக்குழந்தை
பூரணமாய்த்தூங்கி என்கண்ணே பிழைக்க வருள்புரிவாய் (3)

உந்திக்கமலம் கண்ணே உதித்துவந்த நான்முகனே
இந்தக்குழந்தை என்கண்ணே யெழுத்தைநன்றாய் பார்த்தெழுது (4)

வேலவனே அய்யா கண்ணே விளையாடு மென்குழந்தை
ஓலமிடாமல் என்கண்ணே உறங்கவந்து காத்தருள்வாய் (5)

வாணி சரஸ்பதியே கண்ணே வாக்கிற் குடியிருந்து
மேனி நலுங்காமல் என்கண்ணே மெல்லணையில் தூங்கவைப்பாய் (6)

## தாலாட்டும் அர்த்தம்.

கண்ணே என் கண்மணியே கண்ணே கற்கண்டே ரத்தினமே
பொன்னே அமிர்தமே என்கண்ணே புத்திரனே சொல்வதைக்கேள்

ஆராரோவென்று கண்ணே தாலாட்டும் பாட்டதனை
சீராக னுருத்தம் என்கண்ணே செப்புகிறேன் கேள்மகனே (8)

முன்ஜென்மம் நீயாரோ கண்ணே முதற்ஜென்மம் நானாரோ
மின்னொளியாம் ஜென்மமிது என்கண்ணே மேலான தென்மகனே

பின்னொருஞ் ஜென்மம் கண்ணே பிறப்பதுவும் நீயாமோ
இன்னுமொரு ஜென்மம் என்கண்ணே எடுத்திடவும் நானுமோ (10)
இப்போதெடுத்த ஜென்மம் கண்ணே யீசனருள் தேட
தப்பாமல் நல்வழிக்கு என்கண்ணே தபசுசெய்வாய் கண்மணியே

0, 83…

## குழந்தை உற்பத்தி.

தங்கைகுலம் விளங்க கண்ணே தாணியிலோர் பூந்தோட்டம்
சொந்தமாய்த் தானுழுது என்கண்ணே சுத்தமுள்ள நீரைவிட்டு (12)
மாதமொரு பூப்பூத்து கண்ணே மகிழ்ந்திருக்கும் நாளையிலே
சாதகமாய்ச் சங்கரனார் என்கண்ணே சமைத்தார் விரைகுழியில்
பூத்தபூப் பூவாமல் கண்ணே பொலிந்ததந்தப் பூந்தோட்டம்
பார்த்தோர் பலனறிய என்கண்ணே பச்சைக்கொடி படர்ந்து (14)
பாலூறல் காய்பெருத்து கண்ணே பசந்தனிறங் கொடுத்து
நாளாக நாளாக என்கண்ணே நல்லகொடி பொன்னிறமாய் (15)
கொடிபடர்ந்த தோட்டவிரை கண்ணே குடம்போலத் தான்திரண்டு
வெடித்திடுமோவென்றுமனம் என்கண்ணேவிசனமுற்றிருக்கையிலே
காலவரை தப்பாமல் கண்ணே கணக்குவந்து நேர்ந்ததனால்
மேலெழும்பி வந்தகுடம் என்கண்ணே மெலிந்துபலன் தந்ததுபோல்
பத்துமாதம் சுமந்து கண்ணே பாலகனைப் பெற்றெடுத்தேன்
உற்றுப்பார்த்து என்கண்ணே ஊட்டிவைத்தேன் பாலதனை
தொட்டிலிலே போட்டுன்னை கண்ணே தூங்கவைத்து வேலைசெய்ய
கட்டியே ரோரோவென்கண்ணே தாலாட்டிவிட்டேன் தொட்டிலிலே

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
183865

## குழந்தை விளையாட்டு.

குமாரனாய் பெண்மகனே கண்ணே தொந்திவிளையாடிவந்தாய்
யெப்புறமும் சற்றே என்கண்ணே யினியுறங்கு கண்மணியே (20)
நடக்க யெழுந்திருப்பாய கண்ணே நாலடிமுன் வைத்தவுடன்
திடமில்லையென்று என்கண்ணே திரும்பிமுகம் பார்த்தழுவாய் (21)
ஓடித் திரிவாய் கண்ணே உளறிவந்து மேல்விழுவாய்
தேடி மதலைகளை என்கண்ணே தெருவிலே கூப்பிடுவாய் (22)
மதலை மொழியும் கண்ணே மனக்களிப்பும் நான்பார்த்து
பதமான பக்ஷணமும் என்கண்ணே பாலமுதும் ஊட்டிவைத்தேன்
பாலமுதும் பக்ஷணமும் கண்ணே பரிந்துண்ட கண்மணியே
ஞாலத்துள் நடக்கும் என்கண்ணே நன்னடக்கை சொல்லுகிறேன்

## மாதா பிதா குரு தெய்வ வணக்கம்

பெற்றதாய் தெய்வமென்றும் கண்ணே பின்தகப்பன் தெய்வமென்றும்
உற்றுப்பார்த் தென்முகத்தை என்கண்ணே உறங்கிவிடு என்மகனே
ஐந்து வயதாகி கண்ணே அறிவுமிக உண்டாகி
இந்த உலகிலுள்ள என்கண்ணே இயற்கைகளைக் கண்டேகி (26)
பள்ளியிலே சென்று கண்ணே படித்துவரும் நாளையிலே [தரிப்பாய்.
சொல்லிவைக்கும் சற்குருவை என்கண்ணே சுவாமியென்றே தாத்
ஹரியென்றே ஓதுவிக்கும் கண்ணே அர்த்தம் அவர் கடவுள் [னே
தெரிந்து தெய்வம் நான்கெனவே என்கண்ணே தெரிசிப்பாய்என்மக

## கல்வி படிக்கும் ஒழுக்கம்.

காலை யெழுந்திருப்பாய் கண்ணே காலுமுகம் சுத்திசெய்வாய்
நாளையென்று நில்லாமல் என்கண்ணே நடந்து படித்திடுவாய் (29)
உபாத்தியார் சொல்லும் கண்ணே வாக்கியமே பாக்கியமாய்
போத்தியே உன்பாடம் என்கண்ணே பிழையறவே சாற்றிடுவாய்
ஓடி ஒளியாதே கண்ணே உன்தகப்பன் வந்தடிப்பார்
தேடுபொருளெல்லாம் என்கண்ணே தெள்ளமுதே உந்தனுக்கு (31)
படிப்பும் பதம்பொருளும் கண்ணே பலரறிய நீபடித்தால்
குடிக்குக் குறைவில்லை என்கண்ணே கொண்டாடும் லோகமெல்லாம்
விளையாட்டுப் பிள்ளையுடன் கண்ணே வேடிக்கையாகத் திரிந்தால்
பிழையாகும் யென்மகனே என்கண்ணே பித்தடிப்பாய் உத்தமனே
உப்புக்கோடு மறிப்பாய் கண்ணே ஓடிக் குதித்திடுவாய்
தப்பிதமாய்த் தாண்டுகையில் என்கண்ணே தடுமாறிக் கீழ்விழுவாய்
பல்லீங் கிச்சுப்பாடி கண்ணே பல்லுடையுந் தப்பாமல்
பொல்லா விளையாட்டில் என்கண்ணே போகாதே என்மகனே (35)
பெரியோரைத் தான்வணங்கி கண்ணே பெற்றவரின் சொற்கேட்டு
தெரியா விஷயமெல்லாம் என்கண்ணே தெரிந்துகொள்ளுஎன்மகனே
தீரப் படித்து கண்ணே தெளிவாகி வந்தவுடன்
விரத்தனம் பேசி கண்ணே வெகுஇடத்தைச் சுற்றாதே (37)
விட்டி விருந்து கண்ணே விதவிதமாம் புத்தகமும்
பாட்டும் படித்து என்கண்ணே பதம்பிரிப்பாய் யென்மகனே (38)
கல்வித் திறங்கண்டு கண்ணே கற்றவர்கள் மெச்சுதற்கும்
நல்ல விவேகியென்று என்கண்ணே நாட்டிற் புகழுதற்கும் (39)
பெற்றவர்கள் மெத்த கண்ணே பெருமை யடைவதற்கும்
சற்றொரு வித்தைகளை என்கண்ணே கசடறவே கற்றுணர்வாய்

உலகத்தின்நீதி ஔவை கண்ணே உரைத்திட்ட புத்தகத்தில்
பலநீதி சொல்லிவரும் என்கண்ணே பார்த்திடுவாய் யென்மகனே

பாடுபட்டுத் தேடும் கண்ணே பணமெல்லாம் நில்லாது
தேடும்பொருள் கல்வி என்கண்ணே தேசமெங்கும் பேராகும் (42)

பணம்போனால் பிணமாவார் கண்ணே பைத்தியங் கொண்டிடுவார்
குணமான கல்விஒன்றே என்கண்ணே குறையாத செல்வமப்பா (43)

சரியாசனந் தருவாள் கண்ணே சரஸ்பதியா ளென்தாயார்
அறிந்துபடி யென்மகனே என்கண்ணே ஆளாகி மேலாவாய் (44)

## வாலிப போதனை.

வாலிப காலம் கண்ணே வளர்ந்துவரும் நாளையிலே
காலிப்பயல்க ளிடம் என்கண்ணே கனஉறவு செய்யாதே (45)

காலிப் பயல்கள் கண்ணே கனஉறவு செய்தாக்கால்
வாலிபக் கோலம் என்கண்ணே வகைகெடாய் வந்துவிடும் (46)

நேசரைப் போல கண்ணே நெருங்கிப் பழக்கம்வைத்து
வாசனைகள் போட்டு என்கண்ணே வகையுடனே வந்திடுவார் (47)

கோருக்குடுமி வைத்து கண்ணே கிளிக்கொண்டை சீவிவிட்டு
நேருக நெற்றியிலே என்கண்ணே நேத்தியுள்ள பொட்டிடுவார் (48)

பீடி சிகரெட் கண்ணே பிரியமுடன் கைபிடித்து
தாடிமிரப் புகையை என்கண்ணே ஜவுடாலாய் விட்டிடுவார் (49)

தேடி வருவார்கள் கண்ணே திறமறிவா ரென்மகனே
பீடி தருவார் என்கண்ணே பிழைமோசம் வந்துவிடும் (50)

வெளியிலே போவமென்பார் கண்ணே வீதியெல்லாம் சுற்றிடுவார்
தெளிவான பெண்ணொருத்தி என்கண்ணே தெருச்சந்தில் பார்த்திடென்பார்

கண்டால் மயங்கிடுவாய் கண்ணே காமநோய் கொண்டிடுவாய்
வண்டரு றுறவு என்கண்ணே வகையென்றே நம்பிடுவாய் (52)

பன்றியொடு கன்று கண்ணே பழகித் திரிவதனால் [போல்.
சென்றருந்தும் புன்னாரகல் என்கண்ணே சேர்ந்தருந்தும் கன்றது

நாடித் திரிந்து கண்ணே நலங்கெட்டுப் பேரிழந்து
தேடும்பொருள் பலதும் என்கண்ணே தேவடியாள்கைக்கொடுப்பாய்

வெட்டை கிரந்தி கண்ணே வெகுநோய்கள் வந்துவிடும்
கட்டை யழியும்வரை என்கண்ணே கஷ்டமடா யென்மகனே (55)

## கல்யாண முறை.

குணம்நிறைந்த பெண்பார்ப்போம் கண்ணே குலம் விளங்க வாழ்ந்திடுவாள்
கனம் அழகுகன்னியரை என்கண்ணே கருதியலை யாதேயப்பா (56)

மாமன் மகளிருப்பாள் கண்ணே மனம்போல மாதிருப்பாள்
நாமம் பொருத்தம் என்கண்ணே நாள்பார்த்துச் செய்வமடா (57)
கல்யாணம் செய்துவைப்போம் கண்ணே காரிகையை பார்த்தெடுப்போம்
பொல்லாத பெண்களிடம் என்கண்ணே பேசாதே யென்மகனே

## மனைவியை வைத்திருக்கும் முறை.

காலம் கலிகாலம் கண்ணே கல்யாணமான வுடன்
சீலம் ஒழுக்கம் என்கண்ணே சிவபூசை தான்மறப்பார் (59)
பெற்றவரை வைவார் கண்ணே பெண்சாதி சொற்கேட்ப்பார்
கற்றகல்வி தான்மறந்து என்கண்ணே கச்சடாப் பேச்செடுப்பார்
பெற்றவரை வேருய் கண்ணே பிரித்துவைத்துச் சாப்பிடுவார்
உற்றமனையாள் சொல்லை என்கண்ணே உறுதியென்றே நம்பிடுவார்
இத்தனையும் கெட்டவர்கள் கண்ணே இயற்கையடா மகனே
உத்தமனே நீநடக்கும் என்கண்ணே உண்மை உரைத்திடுவேன்
பெண்சாதி யென்ற கண்ணே பிரியம் மனதில்வைத்து
அன்பாயிருக்கு மிடம் என்கண்ணே அன்னேரங் கண்டுகொள்ளு
மற்ற தினங்களிலே கண்ணே மனைவியுனைக் கண்டாக்கால்
குற்றம்வரும் கோபம்வரும் என்கண்ணே குணமாய்நடப்பமென்றே
பணிந்து நடப்பதற்கு கண்ணே பயமுறுத்தி வைப்பதொடு
இனிதான தாய்தகப்பன் என்கண்ணே ஏற்கநட வென்றுசொல்லு
பசிபார்த்து அன்னம் கண்ணே படைத்துமறுமே வலைசெய்வாய்
சுசியாம் பதார்த்தம் என்கண்ணே சொல்லுமுன்னே செய்தளிப்பாய்
கூப்பிட்டாலோடி யென்கண்ணே கொண்டுவா வென்றுசொல்லி
மூப்பிட்டார் தன்மனம்போல் என்கண்ணே முகமலர்ந்து செய்யெனவே
திட்டப்படுத்தி யெங்கள் கண்ணே திருமுகத்தை நீபார்த்து
கட்டையழியும் வரை என்கண்ணே காப்பாற்று யென்மகனே

## சூதாட்டக் கொடுமை.

சூதாடும் சோம்பேறி கண்ணே சொனைகெட்ட ஆண்பிள்ளைகள்
போதாதொரு ஆளு என்கண்ணே போடவா வென்றிழுப்பார்
பாயை விரிப்பார் கண்ணே பணமிருக்கா வென்றுரைப்பார்
ரூபாயைக் கண்டவுடன் என்கண்ணே ரெம்ப உபசரிப்பார்
பிடிச்சீட்டுப் போடுவமா கண்ணே புல்ரெங்கு போடுவமா
விடியும்வரையிருந்து என்கண்ணே விளையாட்டுப்பார்ப்போமென்பார்
சரியென்று நீபோனல் கண்ணே சமர்த்தருனைப் பந்தயத்தில்
வரியாக ஏற்படுத்தி என்கண்ணே வாதாடி வாங்கிடுவார் (72)

மூனடி பக்காசு கண்ணே மொத்தம்பிடி நாலென்பார்
வீணான பக்காசை என்கண்ணே வெட்டுவதால் தோற்றுவிடும் (73)
கொட்டாவி யிட்டிடுவார் கண்ணே குணம்வேறு ஆகிவிடும்
முட்டாளு மாகி என்கண்ணே முழுமுதலும் தோற்றிருப்பார் (74)
அப்போ தொருவன் கண்ணே அய்யய்யோ உன்தகப்பன்
இப்பத்தான் செத்தார் என்கண்ணே யெழுந்துவா வென்றுரைத்தால்
செத்தாலிது வழிதான் கண்ணே தெருவில்வந்து கூடுகிறேன்
முத்தாநீ சொல்லாதே என்கண்ணே முழுமுதலும் தோற்றிருக்கேன்
என்றுரைக்கும் சூதாட்டம் கண்ணே யிது நமக்கு ஆகாது [றேன்
பண்டுமுன்னாள் ராஜாக்கள் என்கண்ணே பட்டதுன்பம் சொல்லுகி
பாண்டவர்கள் சூதாட்டம் கண்ணே பார்த்திடுவாய் பாரதத்தில்
ஆண்டதெல்லாம் தோற்று என்கண்ணே ஆரணியம் போனார்கள்
நளராஜன் நாடிழந்து கண்ணே நாயகியைத் தான்பிரிந்து
குலம்வேறு சொல்லி என்கண்ணே கொண்டிருந்தார் மாற்வேடம்
ஐம்பத்தார் தேசம் கண்ணே ஆண்டவர்க்கே இக்கதியாம்
நம்பத்தான் ஞாயமில்லை என்கண்ணே நாசமிந்தச் சூதாட்டம் (80)
பொல்லாத சூதாட்டம் கண்ணே பொருத்தமில்லை யெல்லோருக்கும்
வெல்லாத இத்தொழிலை என்கண்ணே விரும்பாதே யென்மகனே

## கள்குடியர் கொடுமை.

கள்குடியர் நேசம் கண்ணே கனவிலுமே ஆகாது
புல்குடியர் கூட்டிப்போய் என்கண்ணே புத்திகெடச் செய்திடுவார்
பட்டை பிடிப்பார் கண்ணே பணத்துக்கொரு புட்டியென்பார்
சுட்ட கருவாடும் என்கண்ணே சுண்டல்தின்றே கள்குடிப்பார் (83)
பூச்சி மிதக்கும் கண்ணே புழுமிதக்கும் யீக்கள்மொய்க்கும்
மூச்சு விடாமலதை என்கண்ணே முழிமூடிச் சாப்பிடுவார் (84)
குடித்துவெறி வந்தவுடன் கண்ணே கொடும்பாவி சண்டாளர்
படுத்துப் புறண்டுருண்டு என்கண்ணே பாஷை உளறிடுவார் (85
வாய்வழியே சொள்வடியும் கண்ணே வாய்நாறும் வாந்திவரும்
நாய்போல ளொள்ளென்று என்கண்ணே நம்மையுமே யேசிடுவார்
தாயென்றும் பிள்ளையென்றும் கண்ணே தங்கை தமக்கையென்றும்
யாதொன்றும் பாராமல் என்கண்ணே அறிவுகெட்டுப் பேசுவார்கள்
குறவர் பறையர்முதல் கண்ணே குடித்திருப்பார் கள்கடையில்
தாமில்லை நாம்போக என்கண்ணே தடியருடன் சேராதே (88)
குடிவெறியர் கொள்கையிது கண்ணே குஞ்சமமே என்மகனே
படித்தபிள்ளை யானதினால் என்கண்ணே பாதகரைச் சேராதே (90)

0-183 M88C41K
N30

## திருடர் கொடுமை.

கள்ளர் திருடரென்று கண்ணே கதறுகிறு ரிவ்வுலகில்
கள்ளர் திருடரல்ல என்கண்ணே கருத்துரைப்பேன் கேள்மகனே
வேதியர் வைசியர்முதல் கண்ணே விதித்தபல ஜாதிகளும்
நீதிமக்கள் தானறிய என்கண்ணே நேமிக்கா தோஷமொன்று (91)
பால வயதில் கண்ணே பலகாரம் தின்பதற்கு
ஓலமிடும் மக்களுக்கு என்கண்ணே ஒருகாசும் யில்லையென்றால் (92)
பலபிள்ளை சேர்ந்திடில் கண்ணே பார்த்திருந்து வீடுவந்து
இலையென்ற தாய்தகப்பன் என்கண்ணே ஏமாற்றம் தானடைய (93
காசு பணந்திருட கண்ணே கருத்துவைத்து வீட்டினுள்ளே
கூசாமல் சட்டிபெட்டி என்கண்ணே குறிப்புவைத்துத் தான்திரிவார்
காசெடுத்துப் போவார் கண்ணே கண்டதெல்லாம் வாங்கிடுவார்
நேசம் திருட்டுமக்கள் என்கண்ணே நிக்ஷயமாய்த் தான்பழகி (95)
வீடுட்த் திருட்டுமுற்றி கண்ணே வெளித்திருட்டுச் காசைவைத்து
ரோட்டுவழித் திண்ணைகுளம் என்கண்ணே ரோந்துசுத்தித் தான்திரிவார்
மூட்டை யெடுப்பார் கண்ணே முடிச்சவிழ்த்துக் காசெடுப்பார்
போட்டநகை திருடி என்கண்ணே போய்ச்சேர்ந்தார் தன்வீடு (97)
தாய்தகப்பன் கண்டு கண்ணே தலைமூட்டை தானிறக்கி
ரூபாய்திருடிக் கொண்டுவந்த என்கண்ணே புதுமைஉரையுமென்பார்
அம்மா யிவ்வூரை கண்ணே அடுத்தபட்டி தூங்குபுரம் [யிலே
தெம்மாளி அங்கொருவன் என்கண்ணே தெருத்திண்ணைசாய்கை
கொறட்டைவிட்ட சத்தம் கண்ணே கேட்டதம்மா யெந்தனுக்கு
வெரட்டஇவன் ஆளனல்ல என்கண்ணே விரைவில் திருடிடுவோம்
என்று துணிந்து கண்ணே எடுத்துவந்தே னிம்மூட்டை [டம்மா
கண்டுகொள்வார் சொத்துகளை என்கண்ணே கதவடைத்துத் தாளி
என்றமகன் சொல்லையிலே கண்ணே என்மகனே தந்திரமே
இன்றுமுதல் நம்மள்குடி என்கண்ணே இயல்போடு வாழ்ந்திடலாம்
கொண்டுவா வேண்டியதை கண்ணே குறையாமல் வைத்திருப்பேன்
கண்டதுபோல் கேட்டாலும் என்கண்ணே கைவிரித்து இல்லையென்பேன்
பெற்றபிள்ளை புத்திகெட்டு கண்ணே பிறர்பொருளை கொண்டுவந்தால்
முத்தமிட்டுத் தாய்தகப்பன் என்கண்ணே முகமலர்ந்துவாங்குவதால்
நாளுக்கு நாள்மேலாம் கண்ணே நல்ல திருட னென்று
வாழும் வயதுவரை என்கண்ணே [illegible]கெட்டே தானலைவார் (105)
எக்குலத்தா ராணலும் கண்ணே இவரே திருடரப்பா
முக்கியமாய் இத்தொழிலை என்கண்ணே முத்தேநீ நாடாதே (106)

183865

## பொய்க் கோடுமை.

மெய்யுரைத்தால் மேன்மையுண்டு கண்ணே மேதினியில்கீர்த்தியுண்டு
பொய்யுரைத்தார்க் குவமை என்கண்ணே போஜனமும் கிட்டாது

மெய்யுரைத்துத் தேடும்பொருள் கண்ணே மென்மேலும்விர்த்தியுண்டு
பொய்யுரைத்துத் தேடும்பொருள் என்கண்ணே பிறைபோல தேய்ந்துவிடும்

ஐம்பத்தார் தேசமதை கண்ணே ஆண்ட அரிச்சந்திரன் நிசம்
நம்பத்தா னிவ்வுலகு என்கண்ணே நாடிரிஷி செய்தகதை (109)

விரித்துரைத்தால் கேட்டவர்கள் கண்ணே விசனித் தழுதிடுவார்
சுருக்கமுடன் நானுரைப்பேன் என்கண்ணே சுந்தரமே கேள்மகனே

நாடுநகர் தேடுபொருள் கண்ணே நயந்துரிஷி கைக்குணர்ந்து
ஓடுமக னுடமனைவி என்கண்ணே ஒத்திவைத்துத் தந்திடென்றார்

இல்லையென்று பொய்யுரைத்தால் கண்ணே இந்தரசு உன்னதுதான்
சள்ளையில்லை யென்மனது என்கண்ணே சகலபொருள் தந்திடுவேன்

என்றுரைக்க ராஜரிஷி கண்ணே என்ன துன்பம் வந்தாலும்
முன்கொடுத்த ராக்ஷியத்தை என்கண்ணே மோசமல்லோவாங்குவது

பொய்யுரையேன் செத்தாலும் கண்ணே புத்திரன்பெண் போனாலும்
மெய்யேயுரைப்பதல்லால் என்கண்ணே மெலிந்துசொல்லேன்சுவாமியென்றார்

பெண்டுபிள்ளை கொண்டுவிற்றார் கண்ணே பின்பொருளும் தன்னைவிற்றார்
சென்றுவிதிசந்திரமதி என்கண்ணே செய்தகொலைஉண்மையென்றார்

பொய்யுரையா உண்மையினால் கண்ணே பொறுத்துவந்தாரித்தனையும்
மெய்யுரைத்துக்கீர்த்தி பெற்றார் என்கண்ணே மீண்டுமரசுபெற்றார்

மெய்பேசிகஷ்டம் வந்தும் கண்ணே மேன்மையுற்றா ரென்மகனே
பொய்பேசயெண்ணாதே என்கண்ணே புத்திரனே கண்மணியே

மக்களைப்பெற்றெங்களைப்போல் கண்ணே மகராஜனா யிருந்து [பாய்
துக்கமில்லா வாழ்வுடனே என்கண்ணே தொல்லுலகில் வாழ்ந்திருப்

இத்தனையும் ஆத்தநகர் கண்ணே இந்திரகுலச் சுப்பய்யா
சுத்தமுள்ள தாலாட்டாய் என்கண்ணே சொல்லிவந்தா ரித்தனையும்

புத்தியுடன்நீ படித்து கண்ணே புகழோங்கப் பேரெடுத்தால்
சித்தியடைந்து செல்வம் என்கண்ணே சிறப்புடனே வாழ்ந்திடுவாய்

உ

சிவமயம்.

வேலும் மயிலுந் துணை.

OFFICE OF THE REGISTRAR OF ... 6 NOV 1930

# பெண்குழந்தை தாலாட்டு.

மின்னொளியே பெண்ணமுதே கண்ணே மேலாம் பசுங்கிளியே
கண்ணொளியே வின்ப என்கண்ணே கனியேநீ கண்ணுறங்கு (1)

பெற்றவளும் நானே கண்ணே யென்புத்திரியு நீயானாய்
உற்றதெல்லாம் நீயுணர என்கண்ணே உரைத்திடுவே னென்மகளே

பாலூட்டித் தாலாட்டி கண்ணே பாவாடை பட்டுடுத்தி
மேனிக் கலங்காரம் என்கண்ணே மிகுநகைகள் பூட்டிவிட்டு (3)

காலுக் கொலுசு கண்ணே கைக்கடயம் மோதிரங்கள்
பீலிபதக்கம்முதல் என்கண்ணே பெரும்நகைகள் பூட்டிவிட்டோம்

ஓடித் திரியாதே கண்ணே உத்தமியே யென்மகளே
ஜோடிக் குழந்தைகளை என்கண்ணே துடர்ந்து திரியாதேயம்மா (5)

ஜோடிக் குழந்தைகளை கண்ணே துடர்ந்து திரிவதனால்
தேடி யலைவோம் என்கண்ணே திருடர்பயம் உண்டாகும் (6)

வீட்டிலிருந்து அம்மா கண்ணே வேலைகளைக் கண்பாரு
கூட்டிப்பெருக்கி நன்றாய் என்கண்ணே கோச்சாணம் போட்டுவிடு

பல்லைவிளக்கி நன்றாய் கண்ணே பாத்திரத்தைத் தான்துலக்கி
சள்ளைப்படாதே அம்மா என்கண்ணே தாய்சொல்லைத் தட்டாதே

சமைய லடுப்படியில் கண்ணே தாயருகில் நில்மகளே [வாய்
இமையாமல்க்கண் பார்த்து என்கண்ணே யென்னகறி யென்றுணர்

கூட்டுக்கறி பக்குவமும் கண்ணே குழம்புவைக்கச் செய்முறையும்
நாட்டுக்கு ஏற்ற என்கண்ணே நயமான கைம்முறையும் (10)

பொரிக்கறியும் பச்சடியும் கண்ணே புதினாத் துவயல்களும்
சரியான பக்குவத்தை என்கண்ணே சமர்தாய்த் தெரிந்துகொள்ளு

## பக்குவகால முறை.

பக்குவ காலம் கண்ணே பருவம்வரும் நாளையிலே
எக்காரணத்தாலும் என்கண்ணே எவ்விடமும் போகாதே (12)

பக்குவ மானவுடன் கண்ணே பதிவிரதை யென்றுசொல்ல [றேன்
முக்கியமாய் நீநடக்கும் என்கண்ணே முறைமைகளைச் சொல்லுகி

வீட்டி லிருப்பாய் கண்ணே வேலைகளைச் செய்திடுவாய்
தேட்டமுள்ள சாமானை என்கண்ணே தெரிவிப்பாய் தாயினிடம்

தண்ணீ ரெடுக்க கண்ணே தலைகுனிந்து போய்வருவாய்
எண்ணி ஒருவர்முகம் என்கண்ணே எதிர்நின்று பாராதே (15)

எதிர்நின்று பார்ப்பதினால் கண்ணே என்ன கெடுதிவரும்
மதியாமல் சொல்லிடுவார் என்கண்ணே மார்க்கமில்லையென்காதே

மார்க்கம் உரைப்பேன் கண்ணே மகளேநீ கேட்டறிவாய் [பார்
ஆர்க்கும் அனுபவத்தில் என்கண்ணே அறிந்திருந்தால் ஞாயமென்

வீதிவழியே நீ கண்ணே வெளியேறிப் போகையிலே
நீதியில்லா ஆடவர்கள் என்கண்ணே நின்றுன்னைப் பார்த்திடுவார்

பார்ப்பவ ராரென்று கண்ணே பசுங்கிளியே நீபார்த்தால் [வார்
மூர்க்கருனை முன்னேவிட்டு என்கண்ணே மோகத்தால் பின்துடர்

பக்கம் வருவார் கண்ணே பகட்டுநடை நடப்பார்
வெட்கமு மில்லாமல் என்கண்ணே வெருண்டு வெருண்டேமுழிப்பார்

பணத்துக்கு ஆசைவைப்பாள் கண்ணே பார்ப்போமென்றே கசடர்
தனத்திற் பெரியவர்போல் என்கண்ணே தட்டியே சைகைசெய்வார்

இருமிச் செருமி கண்ணே எச்சில்துப்பும் பாவனையாய்
மறுபடியும் நீபார்க்க என்கண்ணே மயங்கித் திரிந்திடுவார் (22)

மறுநாள் மறுநாள் கண்ணே மணிநேரம் தப்பாமல்
தெருவீதி தோட்டம்முதல் என்கண்ணே தேடித் திரிந்திடுவார் (23)

நாய்க்கு ஒருசந்தி கண்ணே நற்பானை யென்பதுவும் [றும்
வாய்க்குருசி வீட்டில்நித்தம் என்கண்ணே வடித்துவரும்பானையென்

பாராம லோடி கண்ணே பசிதீர வுண்ணுகையில்
சீராகக் கண்டோர் என்கண்ணே செருப்பா லடித்திடுவார் (25)

அத்தன்மை ஆடவர்கள் கண்ணே அறியாமல் மோகம்வைத்து
எத்தனையோ பெண்களிடம் என்கண்ணே ஏசியடி பட்டார்கள் (26)

பெண்புத்தி பேதமையால் கண்ணே பிசகுவந்து நேருமம்மா
தன்புத்தி தன்னிரையே என்கண்ணே தையலற்குக் கற்பாகும் (27)

ஆனதால் நான்மகளே கண்ணே அறிவித்தே னுந்தனுக்கு
வீணாக யென்மேலே என்கண்ணே விசனம்வைத்துக் கொள்ளாதே

## பெண் பார்க்கும் முறை.

மாப்பிள்ளைக்குப் பெண்பார்க்க கண்ணே மனமுவந்து வந்திடுவோர்
கூப்பிட் டடுத்தவரை என்கண்ணே குணம்கொள்கை தானறிவார்

தாய்தகப்பன் நல்லவரா கண்ணே தவறி நடப்பவரா
நோய்பலது மில்லாமல் என்கண்ணே நோகா திருப்பவரா (30)

சீர்முறையும் ஜாதிமுறை கண்ணே சிறப்பாகச் செய்பவரா
பேரென்ன பெண்மணிக்கு என்கண்ணே பிசகா துரையுமென்பார்

ஆகையா லென்மகளே கண்ணே அடுத்தோ ரறிவதற்கு
தோகையே நல்லவழி என்கண்ணே துடங்கி நடந்துகொள்ளு (32)

எடுத்துரைக்கும் வண்ணம் கண்ணே என்மகளேநீ நடந்தால் [றேன்
அடுத்தோருரைக்கும்மொழி என்கண்ணே அன்புடனேசொல்லுகி

அடுத்தவீடு போகாள் கண்ணே யார்முகமும் பார்த்தறியாள்
சுடுத்த முகமுமில்லை என்கண்ணே சிரித்தமுகம் செல்வவதி (34)

தாய்தகப்பன் சொல்லை கண்ணே தடுத்தமொழி கண்டதில்லை
வாய்ப்பேச்சைப் பார்த்தால் என்கண்ணே வளர்த்தகிளிஒத்திருக்கும்

பெண்ணுக்கு யேற்ற கண்ணே பிரியமுள்ள மாப்பிள்ளையா
கண்ணாலே பார்ப்பதற்கு என்கண்ணே கல்யாணஞ்செய்யுமென்பார்

நன்னடக்கை யில்லாத கண்ணே நாரியரா யிருந்தால்
முன்னடந்த சேதிசொல்லி என்கண்ணே மூதேவி யென்றிடுவார்

எண்ணிப்பா ரென்மகளே கண்ணே யிச்சொல்லு வாருமல்
முன்சொன்ன நன்னடக்கை என்கண்ணே முழுதும் தவராதே (38)

கல்யாணம் செய்துவைப்போம் கண்ணே கைக்குகந்த மாப்பிள்ளையை
நல்லாய்நீ நாயகர்க்கு என்கண்ணே நன்றாய்ப் பணிவிடைசெய்

கோழிகூவு முன்னெழுந்து கண்ணே கூட்டிப் பெருக்கிவைத்து
வாளியிலே சாணமிட்டு என்கண்ணே வாசல் தெளித்திடம்மா (40)

பாத்திரத்தைத் தான்துலக்கி கண்ணே பல்லைநன்றாய் சுத்திசெய்து
நாத்தியர்கள் மூத்தோரை என்கண்ணே நாடி யெழுப்பிடம்மா (41)

கணவன் யெழுந்திருக்கும் கண்ணே காலம்தெரிந்து வைத்து
குணமாகச் செம்புஜலம் என்கண்ணே கொண்டுவந்து வைத்திடம்மா

விபூதிபக்கம் வைத்து கண்ணே விழுந்து நமஸ்கரித்து
நீபூதி வாங்கி என்கண்ணே நெற்றியிலே யிட்டிடம்மா (43)

குளிப்பதற்கு வெந்நீரா கண்ணே குளிர்ந்த ஜலந்தானு
அளிக்கவிடை தாங்களென்று என்கண்ணே அந்நேரம் கேட்டிடுவாய்

தண்ணீரவர் மனம்போல் கண்ணே தாட்டாகத் தான்கொடுத்து
உண்ணும் பதார்த்தம் என்கண்ணே ஒருநொடியில் செய்துகொடு

பதார்த்தம் பரிமாறி கண்ணே பசியாறி வந்தவுடன்
எதார்த்தம்அவர் முன்னாக என்கண்ணே என்னபணி யென்றுநில்லு

ஒன்றுமில்லை யென்சோவி கண்ணே உன்வேலை நீபாரு
என்றுரைத்து உன்கணவன் என்கண்ணே ஏகிடுவா ரப்பொழுதே

அடுப்பில் நெருப்பிட்டு கண்ணே அன்னம் கறிவகைகள்
வடித்திறக்கி வைத்து என்கண்ணே வரும்வழியை பார்த்திருப்பாய்

வருவா ரெதிர்பாரு கண்ணே வந்தவுடன் முகம்பாரு
தருவா ரெதையும் என்கண்ணே தாங்கியதை உட்சேரு (49)

வருத்தமாய் வந்தாரோ கண்ணே வாதுகளைச் செய்வாரோ
பொருத்தமாய் நீநடந்து என்கண்ணே புந்திமகிழ வைப்பாய் (50)

சந்தோஷ வார்த்தைசொல்லி கண்ணே சாப்பிட வாங்களென்று
முந்த உபசரித்து என்கண்ணே முகங்கழுவ நீரளிப்பாய் (51)

சாப்பாடு போட்டு கண்ணே சரியாய்ப் பரிமாறி
காப்பாடுந் தெய்வம் என்கண்ணே கணவனென்றே தோத்தரிப்பாய்

கற்புடைய மங்கையர்கள் கண்ணே கணவனே தெய்வமென்று [ள்
சொற்படியே தானடந்து என்கண்ணே சொர்க்கத்தைச் சேர்ந்தார்க

ஆகையா லென்மகளே கண்ணே அறிவுடைய கண்மணியே
மாய்கையா மிந்த என்கண்ணே மனுஜென்மம் யீடேற (54)

பதிவிரதை யென்பதையும் கண்ணே பத்தாவுக் கேற்றதையும்
விதியுள்ள நாள்வரையும் என்கண்ணே விரும்பி நடந்திடம்மா (55)

மக்களைப் பெற்றிடுவாய் கண்ணே மகிழ்ச்சியாய் வாழ்ந்திடுவாய்
துக்கமில்லா நல்வாழ்வு என்கண்ணே தோகையரே தான்கிடைக்கும்

ஆத்தங் குடியில் கண்ணே அவதரித்த இந்திரகுல
கோத்திரத்துச் சுப்பய்யா என்கண்ணே கூறிவந்த தாலாட்டை (57)

பார்த்தோர் படிப்போர் கண்ணே படித்தவிடங் கேட்போர்கள் [மா
பூர்த்தியாய் தப்பிதத்தை என்கண்ணே பிழைபொறுக்கச் செய்திடம்

ஆனைமுகத்தோன் வாழி கண்ணே ஆதிசிவன் தான்வாழி
சேனை குரங்குகொண்ட என்கண்ணே ஜெயராமன் தான்வாழி (59)

பூவி லயன்வாழி கண்ணே புகழேந்திரன் வாழி
நாவிலுறை மகளும் என்கண்ணே நங்கை இலக்குமிவாழி (60)

வேலும் மயிலும்வாழி கண்ணே விண்ணுலகோர் தான்வாழி
காலனார் தூதர்முதல் என்கண்ணே கலியுகத்தோர் தான்வாழி (61)

பேரான தாலாட்டை கண்ணே பெருமையுடன் பாடியவர்
சீராகவாழி சொல்லி என்கண்ணே ஜெகம்புகழ வாழியதே (62)

முற்றிற்று.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
183865

நாடார்
பிரஸ்,
மதுரை